Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X



# Multi-Faceted Personality of the Women in Sangam Literature

**Dr. T. Prahalathan,** Associate Professor of Tamil, Sindhi College, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-4400-3356
**DOI: 10.5281/zenodo.12619701**

## Abstract

*Women's welfare has been discussed splendidly in the Sangam Literature. Women have excelled in character and lifestyle in the Sangam period. According to the Sangam literary sources, the women of the Sangam period excelled in showing affection and taking care of the people around them. This study has the plan to evince how Sangam literature reveals the multi-faceted life of women at that time. Sangam literature can be called world-class literature because it seems universal in the concept and idea of life. In Tamil culture, human life can be divided into two types, internal (Agam) and external (Puram). In the case of love, the love life felt by the soul is internal (agam) and that which is felt by others is external (puram). It includes life stories, education, sceptre, rule, valour, gift, etc. in the ancient Tamilagam Thus, the interests of women such as the virtuous characteristics of household women, sool women perform rituals towards the god, women in the evening, kuravaikuthu, the role of friends in Sangam literature, vilaimaanthar street, old women carrying goods for sale, the status of wealthy women, women's romantic virtue and chastity are detailed in this article.*

**Keywords:** Multi-Faceted Personality, Women, Sangam Literature.

## References

[1] Desika Vinayagam Pillai. Malarum Malaiyum. Chennai, 1960.
[2] Bharathidasan. Bharathidasan Kavithaigal. Poombukar Pathipagam, Chennai, 1992.
[3] Varathrasanar. *Thirukkural*. Pari Nilayam, Chennai, 2014.
[4] *Tholkappiam*. Porulathikaram (Agathinaiyiyal, Purathinaiyiyal). Nachinarkiniyar Urai. Amaravathi Pathipagam, Chennai, 2017.
[5] U.Ve.Sa. *Kurunthogai Moolamum Uraiyum*. Dr.U.Ve.Sa. Nool Nilayam, Chennai, 2017.
[6] Pinnathur Narayanasamy Iyengar Urai. Nattrinai. Kazhaga Veliyeedu, Chennai, 1962.
[7] Dr. U. Ve. Saminatha Iyer. *Pathuppattu Moolamum Uraiyum*. Nachinarkiniyar Urai. Nool Nilayam, Chennai, 2018.
[8] Ouvai Duraisamy Pillai. *Purananooru*. Kazhaga Veliyeedu, Chennai, 1967.
[9] Na. Mu. Venkatasamy Nattar. *Agananooru*. Kazhaga Veliyeedu, Chennai, 1968.
[10] Balasubramanian, C. *Pattum Thogaiyum*. Sri Venkateswara Acchagam, Chennai, 1994.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 4, Issue 1, May 2024** **E-ISSN – 2583-715X**

# சங்க இலக்கிய மகளிரின் பன்முகத் தன்மை

**முனைவர் த. பிரகலாதன்,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, சிந்திக்கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4400-3356
**DOI: 10.5281/zenodo.12619701**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககாலத்தில் பெண்மை நலம் பெரும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. பெண்கள் பண்பாலும் வாழ்வியல் நெறியாலும் சிறப்பாக திகழ்ந்துள்ளனர். சான்றோர்கள் கூறும் அறநெறியிலிருந்து வழுவாது அன்பு நிலையிலும்,கற்பியல் நிலையிலும், சுற்றம் ஓம்பலிலும், விருந்து புறந்தருதலிலும் சங்க கால மகளிர் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு பல வகையிலும் சிறப்பு வாய்ந்த பெண்களின் நலன்களான இல்லற மகளிர் பண்புகள், சூல் மகளிர் தெய்வத்திற்கு மடை கொடுத்தல், மாலைக்காலத்தில் பெண்கள், குரவைக்கூத்து, சங்க இலக்கியத்தில் தோழியின் பங்கு , விலை மகளிர் வீதி , முதுமகளிர் நுகர்பொருளை ஏற்றி திரிதல் , செல்வ மகளிர் நிலை, பெண்கள் காதல் அறம், கற்பு இக்கட்டுரை போன்றவற்றை எடுத்தியம்புகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** பன்முக ஆளுமை, பெண்கள், சங்க இலக்கியம்.

**முன்னுரை**

சங்ககாலத்தில் பெண்மை நலம் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. பெண்கள் பண்பாலும் நெறியாலும் சிறப்பாக திகழ்ந்துள்ளனர். சான்றோர்கள் கூறும் அறநெறியிலிருந்து வழுவாது சங்க கால மகளிர் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு சிறப்பு வாய்ந்த பெண்களின் நலன்களை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. தமிழ் சங்க இலக்கியமென்று கருதப்படுகின்ற எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தொன்மை வாய்ந்தவை. சங்க இலக்கியத்தை நுண்ணியதாய் கற்றால் அதில் உள்ள வாழ்வியல் கருத்துக்கள் புலப்படும். மானுட வாழ்வியல் அகம் புறம் என்று இரு வகைப்படும். இல்லற வாழ்வில் ஒருவனும் ஒருத்தியும் தூய்க்கும் அன்பு தொடர்பான, உள்ளத்தால் உணரப்படும் காதல் வாழ்க்கை அகம் என்றும் தாமே அன்றி பிறராலும் உணரப்படுவது புறம் என்றும் கொள்வர். கல்வி, செங்கோல் ,ஆட்சி, வீரம், கொடை பற்றிய வாழ்வியல் நிகழ்வுகள் புறத்தில் அடங்கும்.

சங்க இலக்கியப் பாடல்களைச் சாதி சமய வேறுபாடு இன்றி அரசர், வணிகர், பெண்கள், எயினர், குறவர், குயவர் என எல்லா நிலையினரும் பாடியுள்ளனர். சமண, பௌத்தம், வைதீகம் முதலிய பல வகையான கொள்கைகளும் சங்க பாடல்களில் காண முடிகிறது. இந்நூலில் அரசு, அறம், கொடை, இன்பம், போர், பழக்கவழக்கம், அருள், அன்பு, இல்வாழ்க்கை, ஒழுக்கம், கடமை, நட்பு, செய்ந்நன்றி அறிதல் என பல நிலைகளில்

அறக்கருத்துகள் அமைந்துள்ளன, எனவே சங்க இலக்கியத்தைச் சங்க இலக்கிய கருவூலம் என்று அழைப்பர். அவ்வகையில் சங்க இலக்கியத்தில் மகளிர் மாண்புகள் பெருமளவில் அறியப்படுகின்றன.

**மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டும்அம்மா**
**பங்கயக் கைநலம் பார்த்தலவோ இந்தப்**
**பாரில் அறங்கள் வளரும் அம்மா (மலரும் மாலையும், ப. 148)**

என்று இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் கவிமணி அவர்கள் பெண்மையைப் போற்றிப் பாடினார்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக்கடை (திருக்குறள், 53)**

ஒருவன் எல்லா செல்வங்களும் பெற்று நல்ல மனைவி பெற்றிருக்கவில்லை என்றால் அதனால் எந்த பயனும் இல்லை என்று வள்ளுவர் குறிப்பிடுவதன் வழி பெண்ணின் முக்கியத்துவம் அறிய முடிகிறது.

தமிழர்கள் தம் வாழ்வு தொடங்கிய காலம் முதல் பெண்களைப் போற்றிச் சிறப்பித்தார்கள். அதன் வெளிப்பாடு இறைவனை உமையொரு பாகனாகக் கண்டார்கள். சங்ககாலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்றனர் .பொற்காலத்தில் மகளிர் மாண்பு நிறைந்த மகளிராக திகழ்ந்தனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களை உடையவர்களாய் விளங்கினர். பெண்கள் திருமணத்திற்கு முன்பும் பின்பும் போற்றத்தக்க மாண்புடையவராகவே விளங்கினர்.

**அச்சமும் நாணும் மடனும்முந் துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல். களவியல், நூ. 8)**

பெண்களுக்கு உயிரை விட நாணம் சிறந்ததாகும். நாணத்தை விடக் கற்பு சிறந்ததாகும் என்று தொல்காப்பியம் பெண்ணின் பண்புகளைக் குறிப்பிடுகிறது.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று (தொல். களவியல், நூ. 23)**
**நீரோர் அன்ன சாயல்**
**தீயோர் அன்னவென் னுரனவித் தன்றே (குறுந்தொகை, பா. 95)**

இக்குறுந்தொகை பாட்டில் மகளிர் மென்மை நீராகவும், ஆண்கள் வன்மை தீயாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. எனவே தான் பெண்கள் மெல்லியலார் என்று குறிக்கப்படுகின்றனர்.

**உயிரினும் சிறந்த நாணும் நனி மறந்து**
**உரைத்தல் உய்த்தனளே தோழி (நற்றிணை, பா. 17: 8- 14)**

Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X

உயிரைக் காட்டிலும் மிகுந்த நாணத்தை மறந்து தலைவி, தலைவன் மார்பு அணங்கு எனக் கூறியதற்கு வருந்துகிறாள். இங்கு மகளிர் நாணத்தைப் உயிராகப் போற்றி வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.

**மகளிர் விளையாட்டுகள்**

சங்க கால மகளிர் தங்கள் மனதிற்கு உகந்த விளையாட்டுகளைத் தேர்ந்தெடுத்து விளையாடினர். பூக் கொய்தல், புனல் விளையாடல், ஊசல், பந்தாடுதல், மணலில் சிற்றில் கட்டுதல், அம்மானை முதலியன மகளிரின் இளம் பருவ விளையாட்டுகள் ஆகும். சங்க காலத்தில் வெளியே வந்து, தம் தோழிகளுடன் விளையாட வேண்டிய இளம் பருவ மகளிர் வெளியே வந்து விளையாடாமல் வீட்டில் உள்ளே அடைபட்டு இருப்பது அறமன்று. அவர்கள் உடல் நலத்திற்கு ஏற்றதும் அன்று என சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது.

**விளையா டாயமொடு ஓரை யாடாது**
**இளையோர் இவ்விடத் திற்செறிந் திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமும் தேயம்மெனக்**
**சூளுரை சுமந்து நறுமலர் உந்திப்**
**பொங்கி வரும் புதுநீர் நெஞ்சுணை ஆக்குக (நற்றிணை, பா. 68: 1- 5)**

மகளிர் கோரைப் புல் கொண்டு செய்யப்பட்ட பாவையை வைத்து விளையாடி மகிழ்ந்தனர் என்பதை,

**பனைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்**
**பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்து (குறுந்தொகை, பா. 276: 1- 2)**

குறுந்தொகை உணர்த்துகிறது.

விளையாட்டுத் தன்மை மாறாத இளம் பருவ மகளிர் பிற மனைகள் தோறும் சென்று பாடி கிடைத்ததைப் பலருக்கும் கொடுத்து உதவுவதையும் காணமுடிகிறது.

**பொய்தல மகளையாய்ப் பிறர்மனை பாடி நீ**
**எய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ**
**சிறுமுத்தணைப் பேணிச் சிறுசோறு படுத்து நீ**
**நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ (குறிஞ்சிக்கலி, பா. 23)**

சிறுமனை முற்றத்தில் பெண்கள் கழங்காடுவர் என்பதைப்

**செறியறிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்**
**பொலன்செய் கழங்கின் தெற்றி ஆடும் (புறம்., பா. 36)**

புறநானூறுக் குறிப்பிடுகிறது. மலைவாழ்மக்கள் தினைக்கதிர்களைக் கொய்ய வரம் கிளிகளைத் தட்டை என்னும் கருவியைக் கொண்டு விரட்டினர். அங்குக் கிடைக்கும் மலர்களைக் பறித்துப் மாலைத் தொடுத்து விளையாடினர்.

**தினைப் பூக் குற்றுத் தொடலை தைஇப்**

**புனக்கிளிப் படியும் பூங்கட் பேதை (குறுந்தொகை, பா. 142: 1-2)**

இவ்வாறு மலர்களைப் பறித்து விளையாடுவதையும் வழக்கமாக குறிஞ்சி நில மக்கள் கொண்டுள்ளனர்.

**இல்லற மகளிர் பண்புகள்**

கற்பும், காமமும், நல்ல ஒழுக்கமும், பெண்மை தன்மை பொருந்திய பொறுமையும், நிறைவுடமையும், விருந்து போற்றலும் சுற்றம் தழுவலும் இவை போன்ற சிறந்த செயல்கள் இல்லத்தில் வாழும் தலைமகளுக்கு உரிய தலையாய பண்புகளாக இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**

**மெல்லியல் புரையும் நிறையும் வல்லிதின்**

**விருந்துபுறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். கற்பியல், நூ. 11)**

ஓர் இல்லறம் சிறக்க வேண்டுமானால் அதற்கு இல்லத்தில் வாழும் தலைவியின் பண்புகள் பெரும் இடம் வகிக்கின்றன. இல்லத்திற்கு காதல் அடிப்படையானது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்தல் இல்லறமாகும்.

**கேள் கேடு ஊன்றவும் இளைஞர் ஆரவும்**

**கேள்அல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்**

**ஆள்வினைக் கெதிரிய ஊக்கமொடு புகல் சிறந்து (அகநானூறு, பா. 93)**

கணவன் பொருள் தேட பிரிய நேரும்போது மனைவியைத் தேற்றி வாழ்க்கைக்கும், வாழ்வதற்கும் பொருள் தேவை என்னும் உயரிய இலக்கிய இலட்சியத்துடன் பிரிகிறான். கணவனது பிரிவை எண்ணி வருந்தினாலும் கணவனது கொள்கைக்குத் துணையாக தாம் இருப்பதாக மனைவி உறுதிப்படுத்துகிறாள்.

**தம்நயந்து உறைவோர்த் தாங்கி**

**… மிகு பொருள் நினையும் நெஞ்சமொடு (அகநானூறு, பா. 151)**

இங்கு கணவன் போற்றும் இல்லற கடமைக்கு மனைவியும் துணையாக உள்ளாள். இல்லறத்தில் வாழும் தலைவிக்குத் தலைவனை பிரிதல் ஆற்றொணாத் துன்பத்தைத் தருகிறது பொருள் வயிற் பிரிய கருதிய தலைவனைத் தன் மெய்ப்பாட்டினாலேயே தடுக்க முயல்கிறாள்.

**இறப்ப எண்ணுதிர் ஆயின் அறத்தாறு**

**அன்று என மொழிந்த தொன்றுபடு கிளவி**

**அன்ன ஆக என்னுநள் போல**

**முன்னம் காட்டி, முகத்தின் உரையா,**

**ஓவச்செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி (அகநானூறு, பா. 5: 16- 20)**

Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X

இங்கு ஓவியம் போல் நின்று தடுத்து விடுகிறாள் தலைவி.

**உலகு தொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி**
**மழைகால் நீங்கிய மாசு விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்**
**மறுகுவிளக்கு உறுத்துமாலை தூக்கி**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுஉடன் அயர வருகதில் அம்ம (அகநானூறு, பா. 141)**

உலகில் உழவுத் தொழில் முடிந்து கலப்பைகள் வீட்டில் தூங்குகின்றன.மழை பொழிதலும் நின்றது. முழு நிலவு ஒளிர்கிறது. அது கார்த்திகை நாளைச் சேரும் நாள் .எனவே மக்கள் அனைவரும் தெருக்களில் விளக்கேற்றி வரிசையாக நின்று, மாலைகள் தொங்கவிட்டு, ஒன்றாகக் கூடி, ஆடிப்பாடி விழா கொண்டாடுகிறார்கள். அப்போது பிரிந்த தன் தலைவன் தன்னுடன் இருக்க வேண்டும் என்று தலைவி விரும்புகிறாள் .தலைவியானவள் தலைவன் இன்றி எந்த நிகழ்விலும் கலந்து கொள்வதில்லை என்ற செய்தி இங்கு உணர்த்தப்படுகிறது.

கார்த்திகை விழாவை மகளிர் சிறப்பாக கொண்டாடுவர் என்பதற்கு ஔவையார் சான்று தருகிறார்.

**இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்**
**கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த**
**அம்சுடர் நெடுங்கொடு பொற்பத் தோன்றி அகநானூறு, பா. 11: 3-5)**

இதிலிருந்து அறியமுடிகிறது.

**சூல் மகளிர் தெய்வத்திற்கு மடை கொடுத்தல்**

செவ்வழிப் பண்ணை இசைத்து, யாழும் முழவும் ஒலிப்ப சிறு பறை முழங்க பூசைக்கு வேண்டும் பொருள்கள் பலவற்றோடு பால் சோறு முதலிய மனையோடு நல்ல மயில் போல மெல்ல மெல்ல நடந்து சென்று, திருக்கோயிலில் இறைவனை கைதொழுது நிற்க தேவராட்டியாள் மடை கொடுத்தாள் என்னும் செய்தியை மதுரைக்காஞ்சி உணர்த்துகிறது.

**மாலைக்காலத்தில் பெண்கள்**

மாலைக்காலத்தில் இல்லுறை தெய்வத்தைப் பெண்கள் வழிபட்டனர். கூதிர் காலத்திலும் சங்கு வளையல் அணிந்த கைகளையும், மூங்கில் போன்ற தோளையும், மெத்தென்ற சாயலையும், முத்து போன்ற பற்களையும், குளிர்ந்த கண்களையும் மடப்பத்தையும் உடைய மகளிர் பூந்தட்டில் இட்ட பிச்சியின் அரும்பு மணங்கமழ்தலால் இது மாலைப்பொழுது என்று அறிந்து இரும்பு தகழியில் திரியிட்டு, நெய்வார்த்த, தீயிட்டு, நெல்லும் மலரும் தூவி இல்லுறை தெய்வத்தைக் கைக் கூப்பி தொழுதனர் என்பதை,

Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X

**வெள்ளிவள்ளி வீங்குஇறைப் பணைத்தோள்**
**மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்**
**பூங்குழைக்கு அமர்ந்த ஏந்துஎழில் மழைக்கண்**
**மடவரல் மகளிர் பிடகைப் பெய்த**
**செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து**
**அவ்விதழ் அவிழ்பதம் கமாப் பொழுதறிந்து**
**இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக்கொளீஇ**
**நெல்லும் மலரும் தூய்க்கைதொழுது**
**மல்லல் ஆவணம் மாலை அயர (நெடுநல்வாடை, பா. 36 - 44)**

என்னும் நெடுநல்வாடை பாடலடிகள் உணர்த்துகின்றன.

**குரவைக்கூத்து**

அச்சத்தை செய்யும் வேலனால் இத்திங்கு உமக்கு வந்தது என்ற சொல்லை கேட்டு இனிய இரு இசைக்கருவிகள் முழங்க, முருகனை முன்னிலையாக்கி குறிஞ்சி பூவைக் கடம்பு மரத்தில் சூட்டி புகழ்மிக்க முருகனை வணங்கி மகளிர் ஒருவரை ஒருவர் தழுவி கைகோர்த்து மன்றங்கள் தோறும் குரவைக் கூத்து ஆடுவர் என்பதை மதுரைக்காஞ்சி (611–615) சுட்டுகிறது.

**சங்க இலக்கியத்தில் தோழியின் பங்கு**

தலைவியின் களவைத் தலைவியின் குடிபிறப்பு, நாணம், கற்பு முதலியவற்றிற்கும் தலைவனின் அருள், அறிவு முதலிய பண்புகளுக்கும் செவிலியின் அறிவுக்கும் ,தன்னுடைய காவலுக்கும் எந்த வகையிலும் பழுது உண்டாகாதபடி பொறுப்பாகவும், பக்குவமாகவும், நயமாகவும் தோழி எடுத்துரைப்பதை அறத்தோடு நிற்றல் ஆகும். அகத்துறையில் தோழியின் நிலை மிக இன்றியமையாத இடத்தை பெறுகிறது. குறிஞ்சிப்பாட்டில் தலைவி களவு மணத்தில் ஈடுபட்டாள். அதனை உணர்ந்த தோழி தலைவின் களவு வாழ்க்கை திருமணத்தில் முடிவதே செம்மையானது என்று உணர்ந்து செவிலித் தாயிடம் அறத்தோடு நிற்கிறாள். முத்து முதலியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களுக்கு நடுவில் ஏதேனும் சீர்கேடு அமைந்தால் அதனை சரி செய்து விடலாம். அவ்வாறு அல்லாமல் சால்பு முதலிய மக்கட் பண்புகள் கெடும் போது அதனை சரி செய்ய அருளுடைய ஒருவராலும் இயலாது என்று கற்றோர் கூறுவர். நான் பெற்றோர் அன்பையும், என்னுடைய நாணையும் ஒருசேர கைவிட்டு களவில் ஈடுபட்டு விட்டேன். இதனைத் தாய் அறிந்தால் நம் குடிக்கு ஏதேனும் பழி உண்டாகுமோ? அறவழியில் அறிவுறுத்திய பின் தாய் தந்தையார் மறுத்துவிட்டால் மறுபிறப்பில் நாங்கள் ஒன்றுபடுவோம் என்று தலைவி தன் உள்ள கிடக்கையைக் கூறுகிறாள். இங்கு தலைவியின் அறப்பண்பு (குறிஞ்சிப்பாட்டு: 13- 26) விளங்குகிறது

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X


**விலை மகளிர் வீதி**

கலை வாழ்வுக்கு என மதுரையில் விலை மகளிர் வீதி ஒன்று தனியாக இருந்தது என்று மதுரை காஞ்சி குறிப்பிடுகிறது. இசை நடனம் முதலிய கலைகளில் வல்ல பரத்தையரை வெற்றி பெற்ற வேந்தன் பகைவர் நாட்டில் இருந்து சிறை பிடித்து வரும் கொடிய பழக்கமும் இருந்திருக்கிறது

**முதுமகளிர் நுகர்பொருளை ஏற்றி திரிதல்**

சிவந்த நிறம் உடைய கிளி சிறை என்னும் பொன்னால் செய்யப்பட்ட பாவை பசுமையான வெயிலில் காட்சியளிப்பது போல சிவந்த நிறமுடையவரும் ,ஆடவர்க்கு வருத்தம் தரும் பார்வை உடைய கண்ணுடையோரும், கூர்மையான ஒழுங்குபட்ட பல் உடையவரும், தொய்யில் எழுதப்பட்ட மார்பினை உடையவரும், கரிய கூந்தலை உடையோரும், மயில் போன்ற சாயலை உடையவரும் ஆகிய அழகிய மகளிர் தம்மை ஒப்பனை செய்து கொண்டு விளங்குவர். அப்போது கடுமையான கடலின் கண் தோன்றிய சங்கு போன்று கோரி பின்புறத்தில் முடி இட்டுள்ள நரைத்த கூந்தலையும், நல்ல அழகினையும் உடைய மகளிர் காண்போர் விரும்பும் மணமிக்க மலர்களை ஏந்திக் கொண்டு மனைகள் தோறும் உலவினர் என்பதையும் (மதுரைக்காஞ்சி: 407 - 423) குறிப்பிடுகிறது.

**செல்வ மகளிர் நிலை**

அழகிய பொன்னால் செய்த அணிகலன்களை அணிந்த தெய்வ மகளிர் மண்ணுலகத்தில் வந்தது போன்று பூ வேலைப்பாடுடன் கூடிய வளையல் அணிந்த செல்வ மகளிர் புனுகு முதலான மனப்பொருள்களின் மணம் தெருவெல்லாம் கமழும் படியாக மேகத்தால் மறைக்கப்படும் திங்கள் போன்று நிலா முத்தத்தில் தோன்றி மறைந்தனர் என்று (மதுரைக்காஞ்சி 443 - 452) மதுரைக்காஞ்சிக் குறிப்பிடுவதின் வழி செல்வ மகளிர் தெய்வ வழிபாட்டைத் தவிர பிற இடங்களில் வெளிப்படுவதில்லை என்பதை (மதுரைக்காஞ்சி: 559-.561) உணரமுடிகிறது.

**குல மகளிர் செயல்**

மாலைக்காலம் வந்தவுடன் மனமாகண மகளிர் தம் காதலரைக் கண்டு நாணம் கொண்டு ஏழிசைக் கொண்ட இனிய நரம்பினை உடைய யாழிசையோடு தன் குரல் எடுத்து இசை பாடி தம் கணவரை முயங்குவர் (மதுரைக்காஞ்சி: 559.- 561 ).

**வரைவின் மகளிர்**

தங்களை சிரத்தையுடன் வரைவின் மகளிர் ஒப்பனை செய்து கொண்டனர் .மணம் கமழும் படியாக நீர் திரண்டாற் போல வெண்மலர் மாலைகளைக் கொண்டையில் முடிந்து கொண்டு வளையல்கள் நிறைந்த கைகளை வீசி நடந்தனர். அப்போது அவர்கள் அணிந்த மாலைகளில் சிந்திய பூக்களின் மனம் தெருவெல்லாம் கமழ்ந்தது. குலைந்த ஒப்பனையை மீண்டும் சரி செய்து, செங்கழுநீர் மலர்களையும் ஏனைய பூக்களையும் சிறிதளவில்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X

சூடிக்கொண்டனர். வரைவின் மகளிர் தம்மை புணர்வோரிடம் அவர் மகிழும்படியாக பல வஞ்சனை மொழிகளை பேசி பொருள் பெறுவர். அண்மை ஊர்களில் இருந்தும் சேய்மை ஊர்களிலிருந்தும் பரத்தையை விரும்பி வந்த இளம் செல்வர்களின் பொருள்களை முழுதும் கவர்ந்து கொண்டு மலர்களின் தாதுக்களை உண்டு அதனை நினையாமல் அகன்று செல்லும் வண்டு இனத்தைப் போன்று இளம் செல்வர்களின் நெஞ்சம் கலங்கும்படியாக துறந்து செல்வர். மீண்டும் மரங்களை நாடி சென்று அவைகளின் பழங்களைக் கவர்ந்து உண்ணும் பறவைகளைப் போன்று மிகப்பெரிய செல்வர்கள் கூடுகின்ற மணவிழா நிகழ்ந்த இல்லங்களை நாடி சென்று அவர் பொருட்களை கவர்கின்ற தன்மையுடையவராய் (மதுரைக்காஞ்சி: 559-561) விளங்குவர்.

**புதல்வரை ஈன்ற மகளிர்**

தம் கணவர் இம்மை மறுமை பயன்களை என்று மகிழும்படி முதல்வரை பெற்ற மகளிர் மகிழ்ச்சியான பொலிவு பெற்ற சுத்தத்தாருடன் குளத்தில் நீராடுவர் (மதுரைக்காஞ்சி: 600-603) என்பது அறிய முடிகிறது.

**கணவனை பிரிந்த பெண்கள் நிலை**

சங்ககாலத்தில் பிற பெண்களைப் போலவே அரசமாதேவியும் கணவனைப் பிரிந்து பிரிவு துயரில் வாடினாள் என அறிய முடிகிறது. கணவனைப் பிரிந்த கோப்பெரும் தேவி மங்கல அணி அன்றிப் பிற அணிகலன்களை அணியவில்லை. அவளுடைய கூந்தல் மயிர் சாந்து முதலியன பூசப்படாமல் காற்றில் அலைந்து நெற்றியில் புரண்டது. தன்னுடைய காதுகளில் மகரகுழை அணியவில்லை. பொன்னால் செய்த வளையல்களை நீக்கி சங்கினால் செய்த வளையல்களை அணிந்திருந்தாள் அவளுடைய கையில் காப்பு நாணும், கையில் நெளி மோதிரமும் அணிந்திருந்தாள். பட்டு ஆடையை விலக்கி நூல் புடவை அணிந்து இருந்தாள். இவ்வாறு கணவனைப் பிரிந்து புனையா ஓவியம் போல் விளங்கினாள். அவருடைய தோழியரும், செவிலியரும் அவளுடைய வருத்தம் நீங்குமாறு பலவாறு ஆறுதல் கூறி தேற்றினர். கட்டிலின் மேற்புற விதானத்தில் சந்திரனோடு ரோகினி கூடி இருப்பதைப் போல தன் கணவனை கூடி வாழ முடியவில்லை என்று வருந்திப் புலம்பியதாக (நெடுநல்வாடை: 198 - 156) குறிப்பிடுகிறது

**மகளிர் வெறி ஆடி விழா கொண்டாடும் கடைவீதி**

முருகனுக்காக விழா நடத்தும் பெண்களோடு பொருந்தி புல்லாங்குழல் ஒலி எழ யாழ் இசைக்க மத்தளம் ஓசையிட முரசு முழங்க எப்போதும் பெரிய கடைவீதிகளில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும். உயர்ந்த திண்ணைகளையும் பல கட்டுகளையும் சிறிய வாயில்களையும் பெரிய வாயில்களையும் உள்ளே போகின்ற பல இடைவெளிகளையும் உடைய மேகங்கள் படியும் உயர்ந்த மாளிகைகளின் மேல் சிவந்த அடிகளையும், பொன்னாலான அணிகலன்களையும், மெல்லிய ஆடையையும், பவளம் போன்ற

**Volume 4, Issue 1, May 2024** **E-ISSN – 2583-715X**

மேனியையும், மான் போன்ற பார்வையையும், கிளி போன்ற மழலை சொற்களையும் உடைய மென் தன்மை உடைய பெரிய மாளிகைகளில் வசிக்கும் பெண்கள் காற்று நுழைந்து வரும் சாளரத்தின் அருகில் வந்து நின்று வளையல்கள் அணிந்த முன் கையை கூப்பி வழிபடுவார்கள் (பட்டின பாலை: 142 -158) என்பதை உணர முடிகிறது. பகைவர் சிறை பிடித்து செல்லு பகைவர் நாட்டில் இருந்து சிறைப்பு பிடித்துக் கொண்டு வரப்பட்ட பெண்கள் நீர் உண்ணும் துறைகளில் குளித்து மாலை காலத்தில் வழிபாடு செய்தனர் என்பதை நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

**பெண்கள் காதல் அறம்**

தலைவன் மீது தலைவி கொண்ட காதல் அளவிடற்கரியது. உயிரினும் மேலானதாக காதல் கருதப்பட்டதை,

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே (குறுந்தொகை, பா. 3)**

என்னும் குறுந்தொகை பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இதே கருத்தினை ஐங்குறுநூற்றுப் பாடல் **கடலினும் பெரிதெமக் கவருடன் நட்பே (ஐங்குறுநூறு, பா. 154)** என்று தெரிவிக்கிறது. தலைவி தன் கணவனை பிரிவதைப் பெரும் துன்பமாகக் கருதினாள். ஒருநாள் பிரிந்து வாழ்தல் என்பதும் நீக்க முடியாத பெருந் துன்பமாக கருதப்பட்டதை , "மணம் கமழ் கானல் இயைந்த நம் கேண்மை ஒரு நாள் பிரியினும் உய்வரிது" என்ற உலோச்சனார் பாடல் விளக்குகிறது

உடம்போடு உயிர் கொண்டுள்ள தொடர்பினை போன்றது நட்பு அந்த நட்பில் உயிர் வாழ்தலை போன்றது காதல் அதைவிட பிரிவு என்பது சாதலைப் போன்றது என்பதை

**யாக்கைக்கு உயிர் இயைந்தன்ன நட்பின்**
**அவ் உயிர் வாழ்தல் அன்ன காதல்**
**சாதல்அன்ன பிரிவறியோளே (அகநானூறு, பா. 339)**

என்னும் அகநானூற்று பாடல் தலைவியானவள் பிரிவினை இறத்தலுக்கு ஒப்பாக கருதுபவள் என தெரிவிக்கிறது.

தலைவன் தலைவியின் உள்ள புணர்ச்சியைக் காட்டும் வகையில் இப்பிறப்பு ஒழிந்து மறுபிறப்பு எடுக்கும் போதும் நீயே எனக்கு கணவனாக வேண்டும் என தலைவி விரும்புவதை

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீராகியர் என்கணவனை**
**யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்தொகை, பா. 49)**

என்று அம்மூவனார் பாடல் சுட்டுகிறது.

**கற்பு**

தமிழகத்தில் குடும்ப வாழ்க்கையில் மக்கள் பின்பற்றி வரும் ஒழுக்கநெறிகளில் கற்பு தலையாயது. குடும்பத்தில் கற்பு எனும் ஒழுக்கம் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதற்கு சங்க

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X



இலக்கியங்கள் விளக்கம் அளித்துள்ளன. தொல்காப்பியம் கற்பினை இருவகை கைக்கோள்களில் ஒன்றாகக் கருதுகிறது. மேலும் கற்புக்கு பின்வருமாறு விளக்கம் தருகிறது.

**கற்பெனப்படுவது கரணமொடு புணர,**

**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை**

**கொடைக் குரி மரபினோர் கொடுப்ப கொள்வதுவே (தொல். கற்பியல், நூ. 1)**

கொள்ளுதலுக்குரிய மரபினை உடைய தலைமகன் கொடுத்தற்குரிய மரபினை உடையோர் தலைமகளைக் கொடுக்க முறையோடு கொள்வது தான் கற்பு எனப்படும். முறையான திருமணத்தில் முடிவதே கற்பு என்று முன்னோர்கள் விளக்கம் அளிக்கின்றனர். கற்பு என்பது ஆண் பெண் ஆகிய இரு பாலருக்கும் பொதுவில் வைக்கப்பட வேண்டும் ஒருவர் மீது மட்டும் கற்பைத் திணிப்பது மனித செயலன்று என்பதைத் கற்புநிலை என்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும் அதை பொதுவில் வைப்போம், என்று பாரதியாரும் ,ஆண் எல்லாம் கற்பை விட்டு தவறு செய்தால் அப்போது பெண்மையும் கற்பிழந்து விடாதோ என்று பாரதிதாசனும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் சங்க காலத்தில் கற்பு நெறி என்பது பெண்களுக்கு மட்டுமே அமைக்கப்பட்ட ஒரு விதியாகக் காணப்படுகிறது. பெண்கள் கற்புடன் ஒழுகுவது அவளுக்கு மட்டும் பெருமை அல்லாமல் கணவனுக்கும் பெருமை சேர்க்கிறது.

நள்ளிரவின் கண் விருந்தினர் வரினும் உபசரிப்பதே கற்புடைய பெண்டிரின் தன்மை என்பதை,

**அல்லில்லாயினும் விருந்து வரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின்**

**மெல்லியல் குறுமகள் (நற்றிணை, பா. 142: 9-11)**

என்பதை இடைக்காடனார் குறிப்பிடுகிறார். திருமணம் போன்ற மங்கல நிகழ்சிகளுக்குப் குடும்பப் பெண்கள் தலைமை ஏற்றனர். குழந்தைகளைப் பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடி திருமணம் நிகழ்த்தியதைப் அகநானூற்று பாடல் தெளிவு படுத்துகிறது. குடும்ப சமூக முன்னேற்றம் என்பது பெண்களை மையமாக கொண்டே நடைபெற்றது என்றால் அது மிகையில்லை. கணவன் பெற்றோர் உறவினராகிய அனைவரும் இல்லாளை மையமாகக் கொண்டே மதிக்கப்பட்டனர்.

**தொகுப்புரை**

பெண்கள் சங்க காலத்தில் விருந்தோம்பலிலும், ஈகையிலும், ஒழுக்க நெறிகளிலும் சிறந்தோங்கியதோடு சமூகத்திலும் தங்களுக்கென சிறந்த இடத்தை வகித்தனர் என்பதை சங்கஇலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1] தேசிக விநாயகம் பிள்ளை. *மலரும் மாலையும்*. சென்னை, 1960.

Volume 4, Issue 1, May 2024 E-ISSN – 2583-715X

[2] பாரதிதாசன். *பாரதிதாசன் கவிதைகள்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1992.

[3] வரதராசனார். *திருக்குறள்.* பாரி நிலையம், சென்னை, 2014.

[4] *தொல்காப்பியம், பொருளதிகாரம்* (அகத்திணையியல், புறத்திணையியல்). நச்சினார்க்கினியர் உரை. அமராவதி பதிப்பகம், சென்னை, 2017.

[5] உ.வே.சா. *குறுந்தொகை மூலமும் உரையும்.* டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2017.

[6] பின்னத்தூர் நாராயணசாமி ஐயங்கார் உரை. *நற்றிணை.* கழக வெளியீடு, சென்னை, 1962.

[7] டாக்டர் உ.வே.சாமிநாதையர். *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* நச்சினார்க்கினியர் உரை. நூல்நிலையம், சென்னை, 2018.

[8] ஔவை துரைசாமி பிள்ளை. *புறநானூறு.* கழக வெளியீடு, சென்னை, 1967.

[9] ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை. *அகநானூறு.* கழக வெளியீடு, சென்னை, 1968.

[10] பாலசுப்பிரமணியன், சி. *பாட்டும் தொகையும்.* ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம், சென்னை, 1994.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.